**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை - 2023**

-----------------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் ("அதிகாரசபை") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரிவு 07 இற்கு முரணாக 2021 ஆண்டின் போது அமைச்சிலிருந்து கிடைத்திருந்த ரூபா 2,939,171 தொகை பெறுமதியான ஆதனங்கள் பொறித்தொகுதிகளில் ரூபா 1,888,677 இற்கான ஆதனங்களின் பெறுமதி முன்னைய ஆண்டின் மிகையுடன் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் செயற்படாத வருமானங்கள் என சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அந்தப் பெறுமதியினால் மிகைக் கணிப்பாகியிருந்தது. | எதிர்காலத்தில் அரச மானியங்கள் குறிப்பிட்ட வருடத்திலேயே கணக்கீடு செய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டியிருந்த வருமான வரியில் இருந்து கழிப்பதற்காக இடமளித்துள்ள ரூபா 7,482,162 இற்கான தடுத்து வைத்தல் வரித் தொகையை கழித்து ரூபா 28,624,788 தொகை பொறுப்பொன்றென காட்டப்பட்டிருந்த போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இற்கு இணங்க அந்த கணித்தலுக்குரிய விபரங்கள் கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். | மீண்டும் திருத்தப்பட்ட வருமான வரிக் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 பந்திக்கு முரணாக நடைமுறை ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,299,247 இற்கான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் அலுவலக வழங்கள்கள் இருப்புக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்தத் தொகையினால் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் குறைவாகவும், இருப்பு மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது சொத்து வகுப்புக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 81 பிரிவுக்கு முரணாக அதிகார சபையினால் மீளாய்வாண்டில் ரூபா 729,019 தொகை பெறுமதியான கிரயம் நிலையான சொத்துக்கள் விற்பனையின் போது உருவாக்கப்பட்ட இலாபத்திற்கு மேலதிகமாக கிரயத்திற்கு சமமான தொகையொன்று மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து அகற்றப்பட்டு செயற்படாத வருமானம் என சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டு வருமானம் ரூபா 729,019 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன், அதன் விளைவாக மீளாய்வாண்டின் மிகை அத் தொகையினால் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது. | அப்புறப்படுத்தப்பட்ட கிரயத்திற்கு சமமான பெறுமதி ஒன்று மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து அகற்றப்பட்டு இலாபத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பிரிவு 74 முரணாக அதிகார சபையினால் ஊழியர் நலன்கள் ஒதுக்கும் கணக்கில் வித்தியாசமான ரூபா 9,711,030 தொகை ஊழியர் நலன்கள் மிகை ஒதுக்கமென காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக செயற்பாட்டுச் செலவுகள் அப் பெறுமதியினால் குறைக்கணிப்பு ஏற்பட்டிருந்ததுடன் தேறிய மிகை, மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் கணக்கீட்டு நியமங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்ட நட்டஈடு என ரூபா 3,368,815 தொகை மீளாய்வாண்டின் ஊழியர் சம்பளம் மற்றும் வேதனங்கள் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது அதனை நிதியல்லாத மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டிருக்காமையால் செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,368,815 தொகையினால் மிகை கணிப்பு ஏற்பட்டிருந்தது. | 2024 ஆண்டு முதல் பணிக்கொடை இயற்கணிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை சேவைக் கிரயம் மற்றும் வட்டிக் கிரயத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்படுகின்றது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்பாடுகள் அல்லாத வருமானம் என ரூபா 138,977,248 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு அல்லாத மாற்றங்களின் கீழ் சீராக்கல் மேற்கொண்ட காரணத்தினால் ரூபா 3,955,836 தொகையினால் இரண்டு தடவைகள் கணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயற்பாட்டு தொழிற்பாடுகள் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,955,836 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இதனை சரிசெய்து திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிமை காணப்பட்ட கதிர்காமம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி மற்றும் அந்த கட்டிடத்தின் கிரயம் முறையே ரூபா 1,520,000 மற்றும் ரூபா 6,700,000 தொகை அதிகார சபையின் சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கதிர்காமம் விடுதியின் உரிமை அதிகார சபையின் பொறுப்பிற்கு எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான வைப்புக்கள் ரூபா 30,481,887 தொகையினை விடுவித்துக் கொள்ளல் முதலீட்டுத் தொழிற்பாடுகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு இருந்தமையால் தேறிய முதலீட்டு தொழிற்பாடுகள் அந்த பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | இதனை சரிசெய்து திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்ட 04 நிலையான வைப்புக்களின் பெறுமதி அட்டவணையின் படி ரூபா 506,686,029 தொகையென காட்டப்பட்டிருந்ததுடன் இறுதிக் கணக்குகளில் ரூபா 508,254,487 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 1,568,458 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இந்த தவறு 2024 ஆண்டு JE-43 மூலம் கடந்த ஆண்டிற்குரியதாக சரி செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 10(ஆ) இன் படி அதிகார சபையின் மிகையினை கணிக்கும் | மீண்டும் திருத்தப்பட்ட வருமான வரி கணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது குறைக்கப்பட்டிருந்த ரூபா 1,391,557 தொகையாகிய உபசரிப்புச் செலவும் ரூபா 265,095 இற்கான அருவச் சொத்து கிரமமாக கழித்தல் ரூபா 38,400 இற்கான தண்டங்கள் மற்றும் வருவாய்கள் மற்றும் ரூபா 9,711,030 தொகை பெறுமதியான ஊழியர் நலன்களும் சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்த உத்தியோத்தர்களுக்கு செலுத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 3,368,815 இற்கான நட்டஈட்டுத் தொகையும் வரி வருமானம் கணிக்கும் போது மீண்டும் இலாபத்துடன் கூட்டி கணிக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் மூலதனக் கொடுப்பனவு ரூபா 3,383,191 தொகை குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக வரிக்கான வருமானம் ரூபா 11,391,706 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் வருமான வரி ரூபா 3,417,512 தொகை குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | வருமான வரி பொறுப்புக்கள் கணிப்பின் படி வருமான வரி ஒதுக்கம் ரூபா 48,016,852 தொகை எனினும் நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 44,106,950 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் வருமான வரி ஒதுக்கம் ரூபா 3,909,902 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | மீண்டும் திருத்தப்பட்ட வருமான வரி கணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருமான வரி சரியாக கணிக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ஒன்றென ரூபா 13,132,807 என கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டது. அதில் ரூபா 9,473,681 தொகை 5 வருடங்களை மிகைத்த | நீர்கொழும்பு வைத்தியசாலையில் இருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக சுகாதார அமைச்சுச் செயலாளரிடம் | பெற வேண்டிய மீதிகள் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கடன்பட்டோர் மீதிகளும் காணப்பட்டது. | கலந்துரையாடலொன்று வேண்டப்பட்டுள்ளது. கம்பஹா வைத்தியசாலை தொடர்பாக குறிப்பிட்ட நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் பலவின கடன்கொடுத்தோர் என ரூபா 22,503,432 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், அதில் 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 12,430,649 தொகை மீதியொன்று தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | கடன்கொடுத்தோர் மீதிகளில் வீடமைப்பு கட்டிடத்தொகுதிற்கு சொந்தமான பணம் காணப்படுவதுடன் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்ட பின்னர் அந்த முகாமைத்துவ அதிகாரசபை நிதியத்திற்கு அந்தப் பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயம் இன் 13.3 | பதில் கடமை நியமனம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியது நிரந்தர நியமனம் வழங்கும் வரை தற்காலிக செயற்பாடொன்றாக மாத்திரமே இருந்த போதிலும், அதிகார சபையின் நிருவாக அலுவல்கள் போலவே தீர்மானங்கள் எடுப்பதற்கு தொடர்புபடக் கூடிய உத்தியோகத்தர்கள் ஆகிய பொது முகாமையளார்கள், உதவி பொது முகாமையாளர் (மனிதவள மற்றும் நிருவாகம்), உதவி பொதுமுகாமையாளர் (செயற்பாடு/பராமரிப்பு) ஆகிய 03 பதவிகளுக்காக 2 வருடங்களை விட மிகையான காலம் பதில் கடமை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இந்த நிறுவனத்தின் வெற்றிடங்கள் தொடர்பாக 2024 பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் படி குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். | தாபனக் கோவையின் அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும் என. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய 1/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல்களின் பந்தி 6.2 (இ) | அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் மிகை நிதியம் முதலீடு செய்தல் தொடர்பாக நிதியமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 506,686,028 இற்கான 05 நிலையான வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புக்களில் முதலீட்டுக்கான அங்கீகாரம் கோரி வரிசை அமைச்சுச் செயலாளர் மூலம் நிதியமைச்சுச் செயலாளருக்கு 2023 மார்ச் 16 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுரையின் படி முதலீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கைநூலின் அத்தியாயம் 3 பந்தி 6.2 | சுற்றறிக்கைக்கு இணங்க மூலோபாய திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | அடுத்த வருடத்திற்காக அவ்வாறு செயற்படுத்தப்படும் என. | சுற்றறிக்கையின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 21 திகதிய திறைச்சேறிச் செயலாளரின் 01/2021 கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | அமைச்சரவை அங்கீகாரமின்றி அமைச்சு அல்லது நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு கொடுப்பனவுகளை செலுத்துதல் இடைநிறுத்துதல் மற்றும் பல்வேறு நலனோம்பு உதவிநிதிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக புதிய ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்தக் கூடாது. எனினும், ஒட்டுமொத்த பதவியணியினருக்கு ரூபா 5,000 வீதம் உற்பத்தித்திறன் கொடுப்பனவு செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டு மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 3,495,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அதிகார சபையின் இலக்காகிய இலாபத்தை நெருங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியாகிய 130 பேரின் கடமைகளை 94 பேர்களைக் கொண்டு அனவல் செய்யப்பட வேண்டியிருப்பதனால் தின வரவுகளை ஊக்குவிப்பதற்காக மாதாந்தம் 2 நாட்கள் அல்லது அதற்கு குறைவாக விடுமுறைகள் பெற்றுக்கொள்ளும் ஊழியர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,000 வீதம் உற்பத்தித் திறன் கொடுப்பனவொன்று ஒரு வருடத்திற்கான வரையறுக்கப்பட்டவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (உ) | 2003 இன் 24 ஆம் இலக்க பொது | கூட்டு ஆதனங்களின் நுழைவுப் பாதைகள், | சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| வசதிகள் சபை (திருத்தம்) சட்டத்தின் பந்தி 05 பிரிவு (ஏ) | தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்த வெளிகளை பராமரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சாட்டுதல் அதிகார சபையின் குறிக்கோள் ஒன்றாக காணப்பட்ட போதிலும் மாலிகாவத்தை மற்றும் ஜல்தர வீடமைப்புத் திட்டங்களில் அந்த பராமரிப்பு அலுவல்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை. | | இணங்கியிருக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 154,512,945 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 131,059,472 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 23,453,473 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு செயற்பாடுகள் அல்லாத வருமானம் ரூபா 34,222,392 இனால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

(அ) அதிகார சபையின் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டின் மொத்தச் செலவுகள் ரூபா 2,007,356 இனால் அதிகரித்திருந்தது. அதற்காக பிரதானமாக செயற்பாட்டு செலவுகளில் ரூபா 1,307,230 இற்கான அதிகரித்தல் காரணமாக இருந்தது. இங்கு வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பண்டங்களின் கீழ் உபசரிப்புச் செலவு ரூபா 863,954 இனால் அதிகரித்தலும், மோட்டார் வாகனங்களுக்கான எரிபொருள் செலவு ரூபா 3,019,216 இனால் அதிகரித்தலும் பராமரிப்புச் செலவுகளில் அடங்கியுள்ள ரூபா 5,152,682 இற்கான வாகன திருத்த வேலை மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரித்தலும் அதற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும் அதிகார சபையின் 13 ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றிருந்த காரணத்தினால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் ரூபா 7,775,009 இனால் குறைந்திருந்தது.

(ஆ) நிறுவனத்தின் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 11,561,935 இனால் குறைவடைந்திருந்ததுடன், செயற்பாடுகள் அல்லாத வருமானம் ரூபா 34,222,392 இனால் அதிகரித்திருந்தது. செயற்பாட்டு வருமானம் குறைவடைவதற்கு அடிப்படையாக 05 அலகுகளை விட பாதியளவு நிர்மாண வேலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த சான்றிதழ்களின் வருமானம் ரூபா 36,513,214 இனால் குறைவடைதல் மற்றும் நிர்மாணிக்கப்பட்டு முடிவடைந்திருந்த ஆதனங்களுக்காக சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் வருமானம் ரூபா 973,124 இனால் குறைவடைதலும் கம்பஹா வைத்தியசாலையின் பம்பு அறையின் பராமரிப்பு வருமானம் பெறல், ரூபா 1,994,191 இனால் குறைவடைதலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(இ) செயற்பாடு அல்லாத வருமானம் ரூபா 34,222,392 இனால் அதிகரிப்பதற்கு நிலையான வைப்புக்கள் மீதான வட்டி ரூபா 32,972,461 இனால் அதிகரித்தல் அடிப்படைக் காரணமாக இருந்தது. அதேபோல் இந்த செயற்படுகள் அல்லாத வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,684,855 இற்கான தொகையில் உருவாக்கப்படாத பணிக்கொடை மிகை ஒதுக்கம் ஒன்று

அப்புறப்படுத்தப்பட்ட பண்டங்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் நிலையான சொத்துக்களிக் கிரமமாக குறைதலும் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அதிகார சபையின் நடைமுறை விகிதாசாரம் 1.2:1 தொகை திடீர் விகிதாசாரம் 1.2:1 காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போதும் முறையே 2.1:1 மற்றும் 2.07:1 ஆக காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 – 2018 காலப் பகுதியில் ஆரம்ப விடுவித்தல் கடிதம் பெற்றுக்கொண்டிருந்த 400 ஆதனங்களுக்காக இறுதிச் சான்றிதழ் பெற்றுக்கொண்டிருக்காததுடன், அந்த ஆதனங்களின் செல்லுபடியாகும் காலத்தை மீண்டும் புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை மற்றும் தற்காலிக கூட்டு ஆதன சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டிருந்த 50 ஆதனங்களும் பாதி கூட்டு ஆதன சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டிருந்த 15 தொகையும் இறுதிச் சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. 65 ஆதனங்களில் 20 ஆதனங்களும் உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து இணக்கம் மற்றும் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. அதற்கு காரணமாக இருந்தது. | ஆரம்ப விடுவித்தல் கடிதம் வழங்கப்பட்டு 03 வருடங்களை மிகைத்துள்ள செயற்திட்டங்களுக்காக இறுதி சான்றிதழ் வழங்குவதற்கு முன்னர் ஆரம்ப விடுவித்தல் கடிதத்தை புதுப்பித்து இறுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு 2023 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | குறிப்பிட்ட காலப் பகுதியில் சான்றிதழ்கள் வழங்குவதற்கு இயலுமான வகையில் முறையான செய்முறையொன்று தயாரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | அதிகார சபைக்கு கிடைத்திருந்த 1387 முறைப்பாடுகளில் 67 தொகை 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் தீர்த்திருக்கவில்லை. இந்த முறைப்பாடுகளில் அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகள் தொடர்பாக 25 முறைப்பாடுகள் காணப்பட்டதுடன், நீர் ஒழுகுதல் தொடர்பான 13 முறைப்பாடுகள் காணப்பட்டது. அவற்றில் 06 முறைப்பாடுகள் | முறைப்பாடுகள் கிடைத்த பின்னர் நுகர்வோர் பிரிவின் மூலம் தீர்ப்பதற்கு முடிந்தளவு முயற்சி செய்வதுடன் அவ்வாறு முடியாதவற்றை சட்டப் பிரிவிற்கு அறிவித்து விசாரணை நியாயமான காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விரைவாக சிக்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப் பெற்று 2 – 5 இற்கும் இடைப்பட்ட வருட காலம் கடந்திருந்த காரணத்தினால் ஆதனங்கள் மற்றும் உயிர்களுக்கு ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டது. | | |
| (இ) | 1982 இன் 45 இலக்க இணைந்த வீடுகள் (திருத்திய) சட்டத்தில் காணப்பட்ட பிரதான நியதிச் சட்ட பின் இணைப்பின் கீழ் அதன் பிரிவு 3(2) இற்கு இணங்க ரூபா 2003 இன் 39 இலக்க இணங்க வீடுகள் உரிமைகள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 27(3) இற்கு இணங்க முகாமைத்துவ அதிகாரச சபைகளின் பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிதுடன், அது 8(4)(அ) இன் படி முகாமைத்துவ அதிகாரசபையின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகளின் பிரதிகள் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும் அதிகார சபையில் காணப்படும் 1014 முகாமைத்துவ அதிகாரசபைகளில் 586 அதிகாரசபைகள் பதிவு செய்யப்பட்ட நாள் முதல் வருடாந்த கணக்குகள் சமர்ப்பித்திருக்காததுடன், மீதியாகவுள்ள 428 நிறுவனங்களில் 403 நிறுவனங்கள் நடைமுறை ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகள் அதிகார சபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், கூட்டு ஆதன நில அளவைப் படங்கள் பதிவு செய்யப்பட்டு 3 மாதங்களுக்குள் முகாமைத்துவ அதிகாரசபை நிறுவப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 – 2023 காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 39 ஆதனங்கள் தொடர்பாக முகாமைத்துவ அதிகாரசபை நிறுவப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ அதிகாரசபைகளின் வருடாந்த கணக்கறிக்கைகள் கணக்காய்வு செய்வதற்காக கூடிய செலவொன்று மேற்கொள்ள நேரிடுவதனால் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை என முகாமைத்துவ நிறுவனங்களினால் கூறப்பட்டுள்ளது. | அதிகாரசபைகளின் வருடாந்த கணக்குகளை தருவித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கூட்டு ஆதனங்களுக்காக சான்றிதழ்கள் வழங்குதல் அதிகார சபையின் பிரதான கருமம் ஒன்றாக | கோப்புக்கள் களஞ்சியப்படுத்துவதற்காக வசதிகள் குறைந்த அளவில் | விரைவாக அந்த கோப்புக்கள் பாதுகாப்பான களஞ்சியப்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட போதிலும் அவ்வாறு வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் தொடர்பான கோப்புக்கள் பாதுகாப்பாக உரிய முறையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட வேண்டிய போதிலும், அந்தக் கோப்புக்கள் பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்பட்டிருந்தது. | காணப்படுவதுடன் சுவடிக்கூடம் மீண்டும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | வேண்டும். |
| (உ) | 1973 இன் 11 ஆம் இலக்க இணைந்த வீடுகள் உரிமை சட்டத்தின் பிரிவு 5(2) இன் படி இணக்கச் சான்றிதழ்கள் பெற்றிருக்காத ஆதனங்களில் ஆளொருவர் வதிவதற்கு இடமளிக்கக் கூடாது இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 21 கூட்டு ஆதனத்தின் ஆதனங்களுக்காக இறுதிச் சான்றுகள் பெற்றிருக்காததுடன் 12,734 குடும்பங்கள் அந்த மாடிவீடுகளில் குடியமர்த்தப்பட்டு இருந்தனர். கூட்டு ஆதன சான்றிதழ் பெற்றிருக்காத காரணத்தினால் இந்த வீட்டு கட்டிடத் தொகுதிகளில் முகாமைத்துவ அதிகாரசபைகள் நிறுவுவதற்கு முடியாதிருந்ததுடன் பராமரிப்பு அலுவல்கள் உரிய முறையில் நடைபெறாமை மற்றும் வீட்டு உரிமையாளர்களுக்கு காணி உறுதிகள் வழங்குவதற்கு முடியாமல் இருந்தது. மேலும் இந்த கூட்டு ஆதன ஆதனங்கள் காணப்பட வேண்டிய பொது வசதிகள் காணப்படுகின்றனவா போதிலும் மற்றும் இணைந்த வீடுகளின் உரிமைகள் சட்டத்திற்கு இணங்க ஆதனங்களின் உரிமையாளர்களினால் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக அதிகார சபை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. அதன் படி அதிகார சபை தனது பொறுப்பை புறக்கணித்துள்ளது என மேலும் அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி விரைவாக செயற்பட வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் முறையே 139 மற்றும் 94 தொகையும் 45 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் அதில் 14 பதவியணிப் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. மேற்கூறிய 07 பதவியணிப் பதவிகள் 2010 ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அத்தியவசிய பதவிகள் மாத்திரம் நிரப்புவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற இலக்கம் KU-1433 கொண்ட வாகனம் 2019 திசெம்பர் 14 திகதி விபத்துக்குள்ளாகி இருந்தது. அதன் மதிப்பீட்டு திருத்தச் செலவு ரூபா 2,559,571 தொகையாகக் காணப்பட்டதுடன், விபத்து நடைபெற்று 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2024 மார்ச் 25 திகதியளவிலும் இதன் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த விபத்து தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய நபர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 104 விசாரணையொன்று மீண்டும் மேற்கொள்வதற்கு அமைச்சுச் செயலாளர், குழுவொன்று நியமனம் செய்துள்ளது. | வாகன முறைமையை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 30/2016 – ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கும் 12 மாத காலவரையறைக்கு பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடிய பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான பிரதான திருத்த வேலை ஒன்றின் பின்னராகிய விடயங்களில் முதலில் வரும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதிகார சபைக்கு சொந்தமான 12 | 2024 மே முதல் அனைத்து வாகனங்களிலும் எரிபொருள் பரிசோதனைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

வாகனங்கள் தொடர்பான 2019 ஆண்டின் பின்னர் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாடுகள் அல்லாத வருமானத்தில் பாதீட்டு வருமானம் ரூபா 180,960,000 தொகை காணப்பட்டதுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 138,927,248 தொகை காணப்பட்டது. இந்த உள்ளவாறான வருமானத்தில் நிதியல்லாத நிலையான சொத்துக்களின் கிரமமான கழித்தாகியாகிய ரூபா 1,888,677 தொகையும் பணிக்கொடை மிகை ஒதுக்கம் ரூபா 2,067,159 தொகையும் அப்புறப்படுத்தப்பட்ட பண்டங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 729,019 தொகையும் உட்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி பணத்தினால் கிடைக்கக் கூடிய உண்மையான செயற்பாடல்லாத வருமானம் ரூபா 134,242,393 தொகை காணப்பட்டது. அது பாதீட்டு வருமானத்தை விட 26 சதவீதத்தினால் குறைவானது என அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் பாதீட்டு செயற்பாட்டு வருமானத்தை விட உள்ளவாறான வருமானம் ரூபா 74,974,714 தொகையினால் அதாவது 29 சதவீதத்தினால் குறைந்து இருந்ததுடன், ஒட்டுமொத்த வருமானம் பாதீட்டு எண்ணிக்கையை விட 26 சதவீதத்தினால் குறைந்திருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பாதீடு கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |